1970 செப்டம்பர் 2]

சாலைகள்

* 205 வினு—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பனையப்பட்டி–கூடலூர் சாலையை முடித்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(இ) ஆமெனில், எப்போது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) அத்தகைய செயற் குறிப்பு எதுவும், அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

புலவர் பொ. பொன்னம்பலம் : பேரவைத் தலைவரவர்களே, திருமயம் ஒன்றியத்திலுள்ள பனையப்பட்டி–கூடலூர் இடையே ஆற்றின் குறுக்கே பெரும் பாலம் அமைக்க வேண்டிய காரணத்தால், திருமயம் ஒன்றியத்திற்கு அரசு மான்யம் வழங்கி உதவ முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. முத்துச்சாமி : சாலையைப்பற்றியது இது. பாலத்தைப் பற்றி கேட்கிருர். அது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

* 206 வினு—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப் பாரா—

மதுரை மாவட்டத்தில், பாலமேட்டுக்கும் வேம்பரளிக்கு மிடையில் சாலை அமைப்பதற்கான செயற்குறிப்பேதேனும் பரி சீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பாலமேட்டிற்கும் வேம் பரளிக்கும் இடையே ஒரு சாலை அமைத்தலுக்கான கருத்து பரிசீலக் கப்பட்டு, இவ்வேலையானது நிதி நிலைமை சீராகி தக்கசமயம் வரும் வரை பொறுத்திருக்க வேண்டியுள்ளது என்று முடிவெடுக்கப்பட் டிருக்கிறது.

திரு. பி. எஸ். மணியன் : இச்சாலை ஏற்கனவே 1961-ம் ஆண்டில் 2 பர்லாங் தூரம் கட்டப்பட்டு நிறுத்தப்பட்டு இருக்கிறது. இச் சாலை 3 தாலுாக்காக்களையும், 4 தொகுதிகளையும், இணைப்பதாக இருக்கிறது. அதாவது, திருப்பரங்குன்றம், சோழவந்தான், மேலூர் தெற்கு, மேலூர் வடக்கு தொகுதிகளை இணைப்பதாக இருக்கிறது. அழகர்கோவில் சாத்தியார் அணைக்கட்டு இவற்றை இணைக்கும் வகையில் சாலை போட, அரசு விசேஷ திட்டத்தில் இந்த திட்டத்தை இந்த ஆண்டு சேர்த்து அமைக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவரவர்களே, 1961-62 வரை பேரூந்துகளால் அமைக்கப்பட்ட சாலைகளுக்கு மான்யம் கொடுக்கப்பட்டு வந்தது. இப்பாதையை சீராக்க, செப்பனிட ஏறத் தாழ ஆகும் செலவு ரூ. 2.5 லட்சமாகும். இது, ஏனைய சாலைகள் என்ற திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படவேண்டும். மாவட்ட

வளர்ச்சி மன்றங்கள் ஏற்கனவே கொடுத்து இருக்கக்கூடிய திட்டங்களுக்கு ஆகும் செலவே மிக அதிகமாக இருக்கிறது, என்ற காரணத்தால், இதன் மீது முடிவு எடுக்க சிந்திக்க வேண்டும்.

* 207 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் சட்டப்பேரவை உறுப்பினரிடமிருந்து திருப்பூர் நகராட்சிக்குட்பட்ட பாதைகள் நில அளவை செய்தல் குறித்து 10—9—1969, 6—2—1970 தேதிகள் இட்ட கடிதம் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) அரசாங்கத்தின் பரிசிலனையில் உள்ளது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிவித்தார்கள். அது நீண்ட காலமாக இருப்பதால் விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு பாதைகள் செப்பனிடுவதற்கு சர்வே செய்வதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : சர்வே செய்வதற்காக ஆகும் தொகையில் 3ல் 2 பங்கு பஞ்சாயத்தில் வசூல் செய்யவேண்டும். 40 தவணைகளில் செலுத்துவதாக முதலில் சொல்லப்பட்டது. 10 ஆண்டு சம பங்கில் கட்டுவதாக இப்போது கேட்கப்பட்டு இருக்கிறது. நகரசபை தனி அலுவலரின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின் நடவடிக்கை எடுக்கப்படும்.

Thaliyur Co-operative Society

* 208 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(a) whether a memorandum, dated 8th May 1968 signed by a number of M.L.As. and M.Ps was submitted to the Government urging action against the President of the Thaliyur Co-operative Credit Society (Coimbatore District);

(b) if so, the action taken thereon;

(c) whether in the said memorandum they prayed protection to those who detected the malpractices and reported to the Government; and

(d) if so, the action taken by the Government and the extent of protection given ?